

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சி தாழனோடையில் கனிமவள நிதி திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிய ஒன்றிய தொடக்க பள்ளி கட்டடத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (08.08.2023) திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகள சங்க துணை தலைவர் எ.வ.வே.கம்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் து.கணேசமூர்த்தி, தண்டராம்பட்டு ஒன்றிய குழு தலைவர் திருமதி. பரிமளா கலையரசன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கனடாவில் 'WPEG2023' போட்டிகள்

# பதக்கங்கள் குவித்த தலைமைக் காவலர் லீலாஸ்ரீக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக.9- கனடாவில் நடைபெற்ற 'WPEG 2023'ல் பங்கேற்று பதக்கங்கள் குவித்த தலைமைக் காவலர் லீலாஸ்ரீயைப் பாராட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**கனடாவின் வின்னிபெக் நகரில் நடந்து முடிந்த WPFG 2023இல் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களைக் குவித்துள்ள தலைமைக் காவலர் லீலாஸ்ரீ அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசின் சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் காட்டு யானைகளின் எண்ணிக்கை உயர்வு!

# ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை - 2023

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஆக.9- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (8.8.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் "ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு 2023" அறிக்கையை வெளியிட்டார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு வனத்துறை அண்டை மாநிலமான கேரளா மற்றும் கர்நாடகா அரசுகளின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பினை 17.05.2023 முதல் 19.05.2023 வரை நடத்தியது. இக்கணக்கெடுப்பு, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள யானைகள் திட்ட இயக்குநரகத்தின் பரிந்துரையின் படி, யானைகளின் எண்ணிக்கையினை நேரடி மற்றும் மறைமுக முறைகளை பயன்படுத்தி கணக்கிடுவதையும், தமிழ்நாட்டின் 26 வனக்கோட்டங்களில் தொகுதி கணக்கிடுதல் முறை மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் நேரடியாக காணப்பட்ட யானைகளின் தரவுகளை அடிப்படையாக கொண்டு, யானைகளின் இனத்தொகை கட்டமைப்பினை ஆராய்வதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு நடைபெற்றது.

ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, 2017ல் 2761 ஆக இருந்த யானைகளின் எண்ணிக்கை, தற்போது 2961 ஆக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் நான்கு பிற யானைகள் காப்பகங்களுடன் ஒப்பிடும்போது நீலகிரி கிழக்கு தொடர்ச்சிமலை யானைகள் காப்பகமானது அதிக எண்ணிக்கையில், அதாவது 2477 யானைகளைக் கொண்டுள்ளது.

இக்கணக்கெடுப்பின் மூலம் ஆண் யானை மற்றும் பெண் யானை சதவிகிதம் 1 : 2.17 ஆக உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் 1105 யானைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளில் 1855 யானைகளும் உள்ளன. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் யானைகளின் எண்ணிக்கையை விட மேற்கு தொடர்ச்சி மலைகளில் யானைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

இந்த ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பில் (12.05.2023 முதல் 16.05.2023 வரையில்) பல்வேறு யானை சரகங்களில் 1731 துறைப்பணியாளர் மற்றும் 368 தன்னார்வலர்கள், என மொத்தம் 2099 பேர் இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 3496 சதுர கி.மீ பரப்பளவிலான 690 பிளாக்குகளில் இக்கணக்கெடுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு 5 சதுர கி.மீக்கு கீழுள்ள பல சிறு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு, 17.05.2023 அன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 18.05.2023 அன்று யானை பிண்டம் கணக்கெடுப்பு மூலமும் 19.05.2023 அன்று 26 வனக்கோட்டங்களில் நீர்க்குமிழிகள் முறை மூலமும் இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மேற்கண்ட கணக்கெடுப்பு முறையானது, டேராடூனில் உள்ள இந்திய வன விலங்குகள் நிறுவனம், மயிலாடுதுறை ANC கல்லூரி மற்றும் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் போது, வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா. ரெட்டி, முதுமலை புலிகள் காப்பக இயக்குநர் டி.வெங்கடேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில்

# எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு!

## தண்டராம்பட்டு ஒன்றியத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஆக 9- திருவண்ணாமலை, தண்டராம்பட்டு ஒன்றியத்தில் பள்ளிக்கல்வி துறையின் சார்பில் தாழனோடை ஊராட்சியில்; கனிமவள நிதி 2022-23 நிதி திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் புதிய வகுப்பறை கட்டடத்தினை திறந்து வைத்தார். மேலும் ராதாபுரம், நல்லவன்பாளையத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய இரண்டு நியாயவிலைக் கடையினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பேசியதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 115 முழு நேர நியாய விலைக் கடைகளும், 536 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் 8 நியாய விலைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 3 அமுதம் நியாய விலைக் கடைகள் என ஆக மொத்தம் 1662 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் நமது மாவட்டத்தில் செயல்படும் நியாய விலைக் கடைகளின் மூலம் மொத்தம் 7,87,880 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதில் அரிசி குடும்ப அட்டைகள் 6,50,850 சர்க்கரை குடும்ப அட்டைகள் 2,909 யுயுலு அரிசி குடும்ப அட்டைகள் 73,268 ழுயீ அரிசி பெறும் அட்டைகள் 60,079, யுஊ அரிசி பெறும் அட்டைகள் 776 ஆகும் இதில் மே 2021-22ம் ஆண்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 08 முழு நேர நியாயவிலைக்கடைகளுக்கும் 08 பகுதி நேர நியாய விலைக்கடைகளுக்கும் ஆக மொத்தம் 16 நியாய விலைக் கடைகளுக்கும் புதியதாக சொந்த கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும் 16 முழுநேர நியாயவிலைக்கடைகள் மற்றும் 10 பகுதிநேர நியாயவிலைகடைகள் என மொத்தம் 26 நியாய விலைக்கடைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி; மேம்பாட்டு நிதி, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய உறுதி திட்டத்தின் கீழ் நிதி பெறப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவருகிறார். அதில் மகளிர் இலவச பேருந்து பயணத்திட்டத்தின் மூலம் வேலை மற்றும் வணிகர்த்திற்கு செல்லும் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பெரிதும் பயன்பெற்று வருகின்றர்கள் மகளிர்சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மகளிர் சுய உதவி குழுக்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டது,

5 சவரனுக்கு குறைவாக உள்ள நகைகடன் பெற்று உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தமிழ் வழியில் கல்வி பயின்ற பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000ஃ- வழங்கும் திட்டத்தை செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏழை, எளிய குடும்ப தலைவிகள் பயன்பெறும் வகையில்

கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் திட்டம் தகுதி வாய்ந்தவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி அன்று துவங்கப்பட உள்ளது. நான் உணவுதுறை அமைச்சராக இருந்த போது குடும்ப அட்டைதார்களின் நலன் கருதி அரிசி, சர்க்கரை, பாமாயில், பருப்பு உள்ளிட்ட அத்தியவாசிய பொருட்களை நியாயவிலைக்கடைகளில் இலவசமாக வழங்க முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களிடம் எடுத்துரைத்து இத்திட்டத்தை செயல்படுத்தப்பட்டது. மேலும் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் விவசாய குடும்பத்தை சார்ந்தவர் அந்த வகையில் நானும் ஒரு விவசாயி என்ற வகையில் பெருமிதம் கொள்கிறேன். ஏன்னென்றால் விவசாயி பெருகுடி மக்களுக்கு இலவசமாக மும்முனை மின்சாரம் வழங்கியது இன்னும் பல எண்ணற்ற திட்டங்களை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருவது திராவிட மாடல் அரசு என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணை தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு.எ.வ.கம்பன், தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம் இரா.ஸ்ரீதரன், கலசப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் திருவண்ணாமலை மண்டல இணைப்பதிவாளர் கோ.நடராஜன், ஒன்றிய குழு தலைவர்கள் திருமதி. கலைவாணி கலைமணி (திருவண்ணாமலை), திருமதி.பரிமளா கலையரசன் (தண்டராம்பட்டு), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் இல.சரவணன், ராதாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.அலமேலு குமார், நல்லவன்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் ரவி குமார், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### விருதுநகரில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில்

# ரூ.2 ஆயிரம் கோடியில் மெகா ஜவுளிப் பூங்கா!

## பணிகள் தீவிரம்! 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!

சென்னை, ஆக. 9 - விருதுநகர் மாவட்டத்தில் சிப்காட் மூலம் 1,052 ஏக்கரில் ரூ.2 ஆயிரம் கோடியில் தமிழகத்தின் 'மெகா' ஜவுளி பூங்கா அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்தியா முழுவதும் தமிழகம், தெலங்கானா, கர்நாடகா, மராட்டியம், குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் ஜவுளி பூங்காக்கள் அமைக்க ஒன்றிய அரசு அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி, தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் பி.எம். மித்ரா ஜவுளி பூங்கா இ.குமாரலிங்க புரத்தில் சிப்காட் நிலத்தில் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஜவுளி பூங்காவுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச் 22ல் முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வர்த்தகம், ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் கையழுத்திடப்பட்டன. காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது இதற்கான பணிகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து தமிழக அரசின் சிப்காட் உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில், 1,052 ஏக்கர் சிப்காட் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்றிய, மாநில அரசுகள் ரூ.2 ஆயிரம் கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்துகிறது. இதில் 51 சதவீதம் ஒன்றிய அரசும், 49 சதவீதம் மாநில அரசும் நிதி ஒதுக்குகிறது. இ.குமாரலிங்கபுரத்தை மையமாக கொண்டு அருகில் உள்ள அச்சம்பட்டி, கோவில்புலிக்குத்தி கிராமங்கள் வரை இந்த ஜவுளி பூங்கா அமைகிறது. இதன்மூலம் 2 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெறுவர். அதிவீன உட்கட்டமைப்பு, சிறப்பு உற்பத்தி பகுதிகள், சமூக உட்கட்டமைப்பு, உற்பத்தியை உடன் தொடங்க சிறப்பு வசதிகள், வணிகப்பகுதி, பொது அடிப்படை வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன.

ஒரு துணியின் உருவாக்க தேவையான அனைத்து வசதிகளுடன் ஆலைகள் அமைக்கப்பட உள்ளன. தையல், டிசைனிங், டை உள்ளிட்ட ஜவுளி தொடர்பான அனைத்து தொழில்கள் பூங்காவில் இடம்பெற உள்ளன. இங்கு ஊழியர்களுக்கான குடியிருப்பு வசதிகளும் செய்யப்படும். ஒரு ஏக்கரில் சிப்காட் அலுவலகம் அமைய உள்ளது. நான்கு வழிச்சாலையில் இருந்து குமாரலிங்கபுரத்திற்கு செல்லும் ரோடு 30 மீட்டருக்கு மாநில நெடுஞ்சாலைத்துறையால் அகலப்படுத்தப்பட உள்ளது. 1.8 கி.மீ. வரை விரிவாக்கம் செய்யப்படும். மண் பரிசோதனை முடிந்த விட்ட நிலையில் விரைவில் கட்டுமான பணிகள் துவங்க உள்ளன. பல கட்டங்களாக பணிகள் நடக்க உள்ளன. ரூ.36 கோடிக்கு குடிநீர் பிளான்ட் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட உள்ளது.

இந்த ஜவுளி பூங்கா முழுவீச்சில் செயல்பாட்டுக்கு வந்தவுடன் குமாரலிங்கபுரம், கோவில்புலிக்குத்தி கிராமங்களில் உள்ள துவக்கப்பள்ளிகளை தத்தெடுத்து அப்பள்ளிக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட உள்ளன. பல கட்டங்களாக வளர்ச்சி பணிகள் செய்யப்பட உள்ளன. முதல் கட்டத்தில் அமைய உள்ள ஆலைகள் மூலம் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரை பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும். அடுத்தடுத்த கட்டங்களில் இதன் எண்ணிக்கை இன்னும் அதிகமாகி 2 லட்சம் வேலைவாய்ப்புகள் வரை உருவாகும். இது விருதுநகர் மாவட்ட மத்திய பகுதி மக்களுக்கு கிடைத்த பெரிய வரப்பிரசாதம் ஆகும். ஜவுளி பூங்காவிற்கான மாஸ்டர் பிளானை ஸ்கூல் நெட் நிறுவனம் செய்து வருகிறது. ஜவுளி தொழில்கள் அனைத்திற்கும் இடமளிக்கும் வகையில் அலகு வாரியாக கட்டிடங்கள் அமைக்கப்பட உள்ளன.

குறிப்பாக சாய கழிவுகளை சுத்திகரிக்க சி.யு.டி., சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. விரைவில் நில விலை உறுதி ஆகி அறிவிக்கப்படும். திட்ட அலுவலகம் ஒரு ஏக்கரில் குமாரலிங்கபுரத்தில் அமைய உள்ளது. மண் பரிசோதனை முடிந்து விரைவில் பணிகள் துவங்கும். 160 முதல் 180 டெக்ஸ்டைல், அப்பேரல் அலகுகள் ஜவுளி பூங்கா மூலம் இடம்பெற உள்ளன. தமிழகத்தின் மிகப்பெரிய ஜவுளி பூங்காவாக இது இருக்கும். ஒவ்வொரு கட்டமாக இதன் வளர்ச்சி இருக்கும். தற்போது 11 ஜவுளி நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ளன. உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, எம்.இ., பி.எஸ்.சி. படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என்றார்.



திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமையில் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர். அருகில் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், மாவட்ட துணைச் செயலாளர் உதயமலர் பாண்டியன், நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ். மகாலிங்கம், உள்பட நகரக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு கழக செயலாளர்கள் கவுன்சிலர்கள் உள்ளனர்.

### ஒன்றிய அரசு உள்நாட்டு

# பாரம்பரிய தயாரிப்புகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 9 - டெல்லியில் கோடைக்கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, ஒன்றிய அரசு உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து மாநிலங்களவையில், மாற்றுப் பொருட்களின் இறக்குமதியால், நம் நாட்டுப் பாரம்பரியப் பொருட்கள் பாதிக்கப்படுவதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா, உதாரணமாக பிளாஸ்டிக் கேஸ் லைட்டர்களின் இறக்குமதியால் பாரம்பரிய தீப்பெட்டித் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பூர்வீக பாரம்பரிய தயாரிப்புகளை பாதிக்கும் இதுபோன்ற இறக்குமதி பொருட்களை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்ததா, அப்படியானால், மாநில வாரியாக பொருட்களின் விவரங்கள், உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளை பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து பதிலளித்து பேசிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சக மாநில அமைச்சர் அனுப்ரியா படேல், நாட்டில் உள்ள பூர்வீக பாரம்பரிய பொருட்களை பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளது. சமீபத்தில் பிளாஸ்டிக் காஸ் லைட்டர் இறக்குமதியால் பாரம்பரிய தீப்பெட்டி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சிகரெட் லைட்டர்களுக்கான இறக்குமதிக் கொள்கையை "இலவசம்" என்பதிலிருந்து "கட்டுப்படுத்தப்பட்டது" என்று வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகம் திருத்தியுள்ளது.

உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளில் மாற்று பொருட்களின் இறக்குமதியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான எந்த ஒரு ஆய்வும் வர்த்தகத் துறையால் செய்யப்படவில்லை. இந்தத் துறை பல்வேறு அமைச்சகங்களின் கீழ் வருகிறது மற்றும் தனிப்பட்ட அமைச்சகங்கள் உள்நாட்டு பாரம்பரிய தயாரிப்புகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றன.

எடுத்துக்காட்டாக, கைத்தறித் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, இந்திய அரசு கைத்தறி (உற்பத்திக்கான கட்டுரைகளுக்கான இட ஒதுக்கீடு) சட்டம், 1985ஐப் பிரகடனப்படுத்தியுள்ளது. கைத்தறி உற்பத்திக்காக வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. தவிர, உள்நாட்டு மற்றும் பாரம்பரிய கைத்தறி தயாரிப்புகள் புவியியல் குறியீடு (ஜிஐ) சட்டம், 1999 இன் கீழ் பதிவு செய்வதன் மூலம் ஊக்குவிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன என்றார்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.